winmeen.com

# நான்காம் வார நடப்பு நிகழ்வுகள்

## நவம்பர் 2020

நவம்பர் 23-30

# நடப்பு நிகழ்வுகள்

**1.அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, ஒரே வெள்ளை ஒட்டகச்சிவிங்கி காணப்படுகிற நாடு எது?**



அ. பிரேசில்

ஆ. பெரு

**இ. கென்யா ☑**

ஈ. ஆஸ்திரேலியா

❖ அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற உலகின் ஒரே வெள்ளை ஒட்டகச்சிவிங்கியானது கென்யாவில் காணப்படுகிறது. இந்த ஒட்டகச்சிவிங்கியில் ஒரு GPS கண்காணிப்பு சாதனம் பொருத்தப்பட்டுள்ளது. லூசிசம் என்றவொரு மரபணுக்கூறானது விலங்குகளில் வெண்மை நிறத்தை ஏற்படுத்துகிறது.

❖ இந்த ஒற்றை ஆண் ஒட்டகச்சிவிங்கியானது, வேட்டை அச்சுறுத்தல் நிலையில் தற்போது உள்ளது. இந்த ஒட்டகச்சிவிங்கியின் கொம்புகளுள் ஒன்றனில் இணைக்கப்பட்டுள்ள ஜி பி எஸ் கண்காணிப்பு சாதனம், வனச்சரகர்களை அந்த ஒட்டகச்சிவிங்கியின் இருப்பிடம் குறித்து எச்சரிக்கிறது.

**2. 2030ஆம் ஆண்டுக்குள் புதிய பெட்ரோல் & டீசல் மகிழுந்துகளின் விற்பனையை தடை செய்வதாக உறுதியளித்துள்ள நாடு எது?**




அ. பிரான்ஸ்

**ஆ. ஐக்கியப் பேரரசு ☑**

இ. ஜெர்மனி

ஈ. நெதர்லாந்து

❖ புதிய பெட்ரோல் மற்றும் டீசல் கார்கள் மற்றும் வேன்கள் விற்பனையை 2030 முதல் தடை செய்வதாக ஐக்கியப்பேரரசு (UK) அண்மையில் உறுதியளித்துள்ளது. இக்காலக்கெடு முன்னர் உறுதியளித்ததை விட ஐந்து ஆண்டுகளுக்கு முன்னதாக உள்ளது. முன்னதாக, பிரதமர் போரிஸ் ஜான்சன், 2050'க்குள் நிகர சுழியத்திற்கு உமிழ்வைக் குறைப்பதற்காக, 'பசுமைப்புரட்சி'யை அறிவித்தார். கடந்த ஆண்டு, 2050ஆம் ஆண்டுக்குள் நிகர சுழிய உமிழ்வு இலக்கை நிர்ணயித்த முதல் G7 நாடாக UK ஆனது.

**3.அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற ஹிந்தோன் வானூர்தி நிலையம் அமைந்துள்ள மாநிலம் எது?**



அ. குஜராத்

**ஆ. உத்தர பிரதேசம் ☑**

இ. மகாராஷ்டிரா

ஈ. பீகார்

❖ கர்நாடக மாநிலத்தின் கலபுரகி முதல் உத்தர பிரதேச மாநிலத்தின் காசியாபாத்தில் உள்ள ஹிந்தோன் வானூர்தி நிலையம் வரையிலான முதல் நேரடி வானூர்தி சேவை பிராந்திய இணைப்புத் திட்டமான UDAN'இன்கீழ் தொடங்கப்பட்டுள்ளது. இன்றைய நாள் வரை UDAN திட்டத்தின்கீழ் 295 வழித்தடங்கள், ஐந்து உலங்கு வானூர்தி நிலையங்கள் உட்பட 53 வானூர்தி நிலையங்கள், 2 நீர் வானூர்தி

நிலையங்கள் ஆகியவை இயங்கி வருகின்றன. ஸ்டார் ஏர் வானூர்தி நிறுவனம், வாரத்திற்கு மூன்று சேவைகளை கலபுரகி– ஹிந்தோன் இடையே இயக்கும்.

**4.எந்த இந்திய மாநிலத்தின் 31ஆவது மாவட்டமாக 'விஜயநகரம்' உருவாக்கப்பட்டுள்ளது?**

அ. ஆந்திர பிரதேசம்

**ஆ. கர்நாடகா ☑**

இ. கேரளம்

ஈ. தெலுங்கானா



❖ 'விஜயநகரம்' மாவட்டத்தை மாநிலத்தின் 31ஆவது மாவட்டமாக உருவாக்க கர்நாடக அமைச்சரவை அண்மையில் ஒப்புதல் அளித்தது. இந்தப் புதிய மாவட்டம் தற்போதுள்ள பல்லாரி மாவட்டத்திலிருந்து பிரிக்கப்படுகிறது. இப்பகுதியில் ஆட்சி புரிந்து வந்த விஜயநகர அரசின் பெயரால் இந்தப் புதிய மாவட்டம் வழங்கப்படுகிறது.

**5.புதிய பயங்கரவாத எதிர்ப்பு உத்தியை தழுவியுள்ள பிராந்திய அமைப்பு எது?**

அ. SAARC

ஆ. ASEAN

**இ. BRICS ☑**

ஈ. G-77

❖ பிரேசில் (B), ரஷ்யா (R), இந்தியா (I), சீனா (C) மற்றும் தென்னாப்பிரிக்காவை (S) உள்ளடக்கிய பிராந்திய அமைப்பான, 'BRICS' அண்மையில் ஒரு புதிய பயங்கரவாத எதிர்ப்பு உத்தியை தழுவியது. சமீபத்தில் மெய்நிகராக நடைபெற்ற BRICS ஆண்டு உச்சிமாநாட்டின்போது, BRICS நாடுகள் அனைத்தும் சர்வதேச பயங்கரவாதத்தை எதிர்ப்பதற்கான தங்கள் உறுதிப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்தின. மெய்நிகராக நடைபெற்ற இந்த உச்சிமாநாட்டை இரஷ்யா நடத்தியது.

**6. 2050ஆம் ஆண்டுக்குள் எந்த நோயை ஒழிப்பதற்காக உலக நலவாழ்வு அமைப்பு (WHO) உலகளாவிய உத்தியை அறிமுகப்படுத்தியுள்ளது?**

அ. காசநோய்

**ஆ. கருப்பைவாய்ப் புற்றுநோய் ☑**

இ. தட்டம்மை

ஈ. இளம்பிள்ளை வாதம்



❖ 2050ஆம் ஆண்டளவில் கருப்பைவாய்ப்புற்றுநோயை (Cervical Cancer) ஒழிப்பதற்கான உலகளாவிய உத்தியை உலக நலவாழ்வு அமைப்பு (WHO) சமீபத்தில் அறிமுகப்படுத்தியுள்ளது. 2050ஆம் ஆண்டில் தடுப்பூசி, பரிசோதனை மற்றும் சிகிச்சை ஆகியவற்றின்மூலம் நாற்பது சதவிகிதத்துக்கும் மேற்பட்ட புதிய நோய்த்தாக்குதலையும், 50 இலட்சம் இறப்புகளையும் குறைப்பதே இவ்வுத்தியின் நோக்கமாகும்.

- ❖ கருப்பைவாய்ப்புற்றுநோயின் புதிய பாதிப்புகளின் வருடாந்திர எண்ணிக்கை, கூடுதல் செயற்பாடுகள் ஏதுமில்லாமல், 2018ஆம் ஆண்டு முதல் 2030ஆம் ஆண்டு வரை 5.7 இலட்சத்திலிருந்து 7 இலட்சமாக உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**7.எந்த மத்திய அமைச்சருக்கு வாதாயன் வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்படவுள்ளது?**



அ. நிர்மலா சீதாராமன்

**ஆ. இரமேஷ் பொக்ரியால் 'நிஷாங்க்' ☑**

இ. பியுஷ் கோயல்

ஈ. ஹர்ஷ் வர்தன்

- ❖ மத்திய கல்வியமைச்சர் இரமேஷ் பொக்ரியால் 'நிஷாங்'கிற்கு வாதாயன் வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்படவுள்ளது. அமைச்சரின் எழுத்து, கவிதை மற்றும் இதர இலக்கிய படைப்புகளைக் கௌரவிக்கும் வகையில் அவருக்கு இந்த விருது வழங்கப்படுகிறது. இதற்கு முன்பு அவர் ஏற்கனவே பல்வேறு தேசிய, பன்னாட்டு விருதுகளைப் பெற்றுள்ளார்.
- ❖ இரமேஷ் பொக்ரியால் 'நிஷாங்க்', இலக்கியத்துறையில் கௌரவ முனைவர் பட்டம் பெற்றுள்ளார். அவர் இதுவரை பல்வேறு துறைகளில் 75'க்கும் மேற்பட்ட நூல்களை இயற்றியுள்ளார். இலண்டனில் உள்ள வாதாயன் அமைப்பு, கவிஞர்கள், கலைஞர்களுக்கு விருதுகளை வழங்கி கௌரவிக்கிறது.

**8.அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, 'கலிப்ஸோ' ஆபரேஷனுடன் தொடர்புடைய துறை எது?**



**அ. போதைப்பொருள் கடத்தல் ☑**

ஆ. பண மோசடி

இ. குழந்தை கடத்தல்

ஈ. வரி ஏய்ப்பு

- ❖ வருவாய் புலனாய்வு இயக்குநரகமானது (DRI) சமீபத்தில் ஒரு பன்னாட்டு போதைப்பொருள் கடத்தல் மோசடியை, 'Calypso' என்ற பெயரில் முறியடித்தது. இந்த ஆபரேஷன், மும்பை மற்றும் ராஜஸ்தானின் உதய்பூரில் மூன்று நாட்கள் மேற்கொள்ளப்பட்டது. டிரினிடாட் மற்றும் டொபாகோவிலிருந்து மும்பைக்கு அனுப்பப்பட்ட ½ கிலோவுக்கும் அதிகமான கொக்கைனை வருவாய் புலனாய்வு இயக்குநரகம் பறிமுதல் செய்தது. போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்ட நால்வரும் கைது செய்யப்பட்டனர்.

**9.ஆண்டுதோறும் UNESCO'ஆல் உலக தத்துவ நாள் அனுசரிக்கப்படுகிற தேதி எது?**




**அ. நவம்பர் மாதத்தில் வரும் மூன்றாவது வியாழக்கிழமை ☑**

ஆ. அக்டோபர் மாதத்தில் வரும் மூன்றாவது வியாழக்கிழமை

இ. நவம்பர் மாதத்தில் வரும் மூன்றாவது சனிக்கிழமை

ஈ. அக்டோபர் மாதத்தில் வரும் மூன்றாவது சனிக்கிழமை

- ❖ உலக தத்துவ நாளானது ஐநா கல்வி, அறிவியல் மற்றும் கலாச்சார அமைப்பான UNESCO'ஆல் கடந்த 2002'இல் அறிமுகப்படுத்தப்பட்டது. 2005ஆம் ஆண்டு நடைபெற்ற UNESCO பொதுமாநாட்டின்போது,

நவம்பரில் வரும் ஒவ்வொரு மூன்றாவது வியாழக்கிழமையும் உலக தத்துவ நாள் கொண்டாடப்படும் என்று அறிவித்தது. நடப்பாண்டின் (2020) கடைப்பிடிப்பு, தற்போது பரவிவரும் தொற்றுநோயில் தத்துவ பிரதிபலிப்புகளில் கவனஞ்செலுத்துமாறு உலக நாடுகளுக்கு அழைப்பு விடுத்துள்ளது.

**10. கழிவுநீர் கால்வாய்கள் மற்றும் தொட்டிகளை அபாயகரமாக சுத்தம் செய்வதைத் தடுக்க தொடங்கப்பட்ட சவாலின் பெயர் என்ன?**

அ. சபாய்மித்ரா சுரக்ஷா ☑

ஆ. பிரதான் மந்திரி சபாய்மித்ரா

இ. சேப் சபாய்மித்ரா

ஈ. சுவச் பாரத் சபாய்மித்ரா




- 'அபாயகரமான' தூய்மைப்பணியின் காரணமாக எந்தவொரு கழிவுநீர் கால்வாய்கள் அல்லது தொட்டி தூய்மைப்படுத்துவோரும் தங்கள் இன்னுயிரை இழந்துவிடக்கூடாது என்பதை உறுதிசெய்வதற்காக மத்திய அமைச்சர் ஹர்தீப் சிங் பூரி அண்மையில் 'சபாய்மித்ரா சுரக்ஷா' என்ற சவாலை தொடங்கினார்.
- உலக கழிப்பறை நாளை முன்னிட்டு, நாடு முழுவதுமுள்ள 243 நகரங்களில் இது தொடங்கப்பட்டது. இந்த நிகழ்வில், 243 நகரங்களின் பிரதிநிதிகளும் 2021 ஏப்ரல் 30ஆம் தேதிக்குள் அனைத்து கழிவுநீர் கால்வாய் & தொட்டிகளை தூய்மைப்படுத்தும் பணிகளை இயந்திரமயமாக்குவதாக உறுதியளித்தனர்.

# நடப்பு நிகழ்வுகள்

**1.அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, PM–FME திட்டத்தை செயல்படுத்துகிற மத்திய அமைச்சகம் எது?**

அ. நுகர்வோர் விவகாரங்கள், உணவு & பொது வழங்கல் அமைச்சகம்

**ஆ. உணவுப் பதனிடுதல் தொழிற்சாலைகள் அமைச்சகம் ☑**

இ. உழவு அமைச்சகம்

ஈ. கனரக தொழிற்சாலைகள் அமைச்சகம்

- பிரதமரின், சிறு உணவுப் பதப்படுத்தும் நிறுவனங்களை முறைப்படுத்தும் திட்டத்தின் கீழ் (PM–FME), திறன் மேம்பாட்டு பயிற்சியை மத்திய உணவுப்பதப்படுத்துதல் துறை அமைச்சர் நரேந்திர சிங் தோமர், காணொலிக்காட்சிமூலம் தொடங்கிவைத்தார்.
- 5 ஆண்டு காலப்பகுதியில் ₹10,000 கோடி செலவினத்துடன், உணவு பதப்படுத்தும் துறையின் அமைப்பு சாரா பிரிவில் நுண் நிறுவனங்களை முறைப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

**2. 'காற்றாலை பூங்காக்கள் / காற்று–சூரிய ஆற்றல் கலப்பின பூங்கா' ஆகியவற்றை உருவாக்குவதற்கு முன்மொழிந்துள்ள நடுவண் அமைச்சகம் எது?**

**அ. புதிய & புதுப்பிக்கத்தக்க ஆற்றல் அமைச்சகம் ☑**



ஆ. எரிசக்தி அமைச்சகம்

இ. சாலைப் போக்குவரத்து & நெடுஞ்சாலைகள் துறை அமைச்சகம்

ஈ. உழவு & உழவர்கள் அமைச்சகம்

- மத்திய புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகமானது, 'காற்றாலை பூங்காக்கள் / காற்று–சூரிய ஆற்றல் கலப்பின பூங்கா'க்களை உருவாக்கும் திட்டத்தை முன்மொழிந்துள்ளது. நாட்டில் காற்று மற்றும் காற்று–சூரிய கலப்பின பூங்காக்களை உருவாக்குவதற்கான பரிந்துரைகளையும் அமைச்சகம் கோரியுள்ளது. காற்றாலை ஆற்றல் திட்டங்களை நிறுவுவதை விரைவுபடுத்துவதற்காக, வெளியேற்ற வசதிகள் உள்ளிட்ட முறையான உட்கட்டமைப்புகளைக் கொண்ட திட்டம் முன்மொழியப்பட்டுள்ளது.

**3.நில நிர்வாக அமைப்பை முதன்முறையாக தொடங்கியுள்ள மத்திய அமைச்சகம் எது?**

அ. உழவு மற்றும் உழவர்கள் நல அமைச்சகம்

**ஆ. பாதுகாப்பு அமைச்சகம் ☑**

இ. வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம்

ஈ. உள்துறை அமைச்சகம்

- இராணுவத்துக்கு சொந்தமான நிலங்களின் ஒட்டுமொத்த நிர்வாகத்தை மேம்படுத்தும் விதமாக, நில நிர்வாக அமைப்பு ஒன்றை முதன்முறையாக பாதுகாப்பு அமைச்சகம் செயல்படுத்தியுள்ளது இதற்கான இணையதளத்தை பாதுகாப்பு படைகளின் உயரதிகாரிகளின் முன்னிலையில் பாதுகாப்பு அமைச்சர் இராஜ்நாத் சிங் தொடங்கிவைத்தார்.

**4.இந்தியாவில் உள்ள பெண் தொழில்முனைவோருக்காக, 'Project Kirana' என்றவொன்றைத் தொடங்க, கீழ்க்காணும் எந்த நிதியியல் சேவை நிறுவனம் USAID'உடன் கூட்டு சேர்ந்துள்ளது?**

அ. விசா

**ஆ. மாஸ்டர்கார்டு ☑**

இ. அமெரிக்கன் எக்ஸ்பிரஸ்

ஈ. ரூபே

- 'கிராணா திட்ட'த்தின்கீழ், உத்தரபிரதேச மாநிலத்தின் கான்பூர், லக்னோ மற்றும் வாரணாசி போன்ற தேர்ந்தெடுக்கப்பட்ட நகரங்களில் ஈராண்டுகால வேலைத்திட்டம் உருவாக்கப்படவுள்ளது. வருவாய், டிஜிட்டல் கொடுப்பனவுகள் மற்றும் நிதி உள்ளடக்கத்தை விரிவாக்குவதற்கு இந்தத் திட்டம் செயல்படும்.
- இத்திட்டம், அம்மாநிலத்தில் உள்ள பெண்களின் டிஜிட்டல் கல்வியறிவு மற்றும் நிதிசார் கல்வியறிவை கட்டமைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இது பெண்களின் வணிக மேலாண்மை திறனை மேம்படுத்தும். அதிகமான மகளிரை தொழில்முனைவை நோக்கிக்கொண்டுவருவதன்மூலம் அடுத்த ஐந்து ஆண்டுகளில் நாட்டின் GDP 12% முதல் 25% வரை வளரும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

**5.கீழ்க்காணும் எந்த அண்டை நாட்டில், RuPay அட்டையின் 2ஆம் கட்டத்தை பிரதமர் நரேந்திர மோடி தொடங்கிவைத்தார்?**

அ. இலங்கை

**ஆ. பூட்டான் ☑**

இ. மியான்மர்

ஈ. வங்கதேசம்

- ரூபே அட்டையின் இரண்டாம் கட்டத்தை பிரதமர் மோடி மற்றும் பூட்டான் பிரதமர் லயஞ்சென் டாக்டர் லோட்டே ஷெரிங் ஆகியோர் காணொலிக்காட்சி மூலம் தொடக்கி வைத்தனர். ரூபே அட்டைகள் பூட்டானில் செயல்படுத்தப்பட்டதன்மூலம் பூட்டான் முழுவதிலும் உள்ள ATM மையங்கள் & விற்பனை முனையங்களை இந்தியாவிலிருந்து பூட்டானுக்கு செல்பவர்கள் பயன்படுத்த முடியும்.
- இத்திட்டத்தின் இராண்டாம் கட்டம்மூலம் பூட்டானிலிருந்து இந்தியா வருபவர்கள் இங்குள்ள ரூபே மையங்களை பயன்படுத்திக்கொள்ள முடியும். பகிர்ந்து கொள்ளப்படும் கலாச்சார பாரம்பரியம் மற்றும் மக்களிடையே உள்ள வலுவான உறவுகளின் மூலமான பரஸ்பர புரிதல் மற்றும் மரியாதையின் அடிப்படையில் இந்தியா மற்றும் பூட்டானுக்கிடையே சிறப்பான நட்புறவு நிலவுகிறது.

**6.நவம்பர் மாதத்தில் பீகார், ஜார்கண்ட் மற்றும் உத்தரபிரதேசம் ஆகிய மாநிலங்கள் முழுவதும் சூரியக் கடவுளுக்காக கொண்டாடப்படும் விழாவின் பெயர் என்ன?**

**அ. சத் பூசை ☑**

ஆ. தசரா

இ. கர்வா சௌத்

ஈ. கார்த்திகை தீபம்



❖ சூரியக்கடவுளுக்காக அர்ப்பணிக்கப்பட்ட 'சத் பூசை' எனப்படும் திருவிழா, பீகார், ஜார்க்கண்ட் மற்றும் உத்தரபிரதேசம் ஆகிய மாநிலங்கள் முழுவதும் கொண்டாடப்படுகிறது. இந்தத் திருவிழாவின்போது, பக்தர்கள் நோன்பு நோற்கிறார்கள், சூரியக்கடவுளிடம் பிரார்த்தனை செய்கிறார்கள். இந்தத் திருவிழா, அண்டை நாடான நேபாளத்தின் சில பகுதிகளிலும் கொண்டாடப்படுகிறது.

**7. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, துங்கபத்ரா புஷ்கரலு கொண்டாடப்படுகிற மாநிலம் எது?**

**அ. ஆந்திர பிரதேசம் ☑**

ஆ. தெலுங்கானா

இ. கேரளா

ஈ. கர்நாடகா



❖ 'துங்கபத்ரா புஷ்கரலு' என்பது துங்கபத்ரா ஆற்றை கௌரவிக்கும் விதமாக ஆந்திர பிரதேச மாநிலத்தில் கொண்டாடப்படும் 12 நாள் விழாவாகும். இது, இந்த ஆண்டு நவ.20ஆம் தேதி தொடங்கியது. துங்கபத்ரா ஆறானது கர்நாடக மாநிலத்தில் உற்பத்தியாகி தெலுங்கானா மற்றும் ஆந்திர பிரதேசம் ஆகிய இரண்டு அண்டை மாநிலங்கள் வழியாக பாய்ந்தோடுகிறது. நாடு முழுவதுமுள்ள 12 பேராறுகளில், 'புஷ்கரலு' அல்லது புஷ்கரம்' என்ற திருவிழா நடத்தப்படுகிறது.

**8. இந்தியா மற்றும் எவ்விரு நாடுகளிடையே, 'SITEMEX' என்ற முத்தரப்பு கடற்படைப் பயிற்சி நடந்தது?**

அ. வங்கதேசம் & மியான்மர்

**ஆ. சிங்கப்பூர் & தாய்லாந்து ☑**

இ. ஆஸ்திரேலியா & ஜப்பான்

ஈ. சீனா & பிலிப்பைன்ஸ்



❖ இந்தியா, சிங்கப்பூர், தாய்லாந்து கடற்படைகளுக்கு இடையிலான 'SITEMEX-20' என்றழைக்கப்படும் முத்தரப்பு பயிற்சி அண்மையில் நிறைவடைந்தது. இப்பயிற்சி, அந்தமான் கடற்பகுதியில் நடைபெற்றது. இந்திய கடற்படைக்கு சொந்தமான, நீர்மூழ்கிக் கப்பல்களைத் தாக்கியழிக்கும் கப்பலான INS 'கமோர்தா' மற்றும் ஏவுகணை தாங்கிக்கப்பலான, 'கர்முக்' ஆகியவை இந்தப் பயிற்சியில் பங்குபற்றின. முதலாவது SITEMEX பயிற்சி கடந்த ஆண்டு போர்ட் பிளேயரில் நடைபெற்றது.

❖ இந்தியா, சிங்கப்பூர் மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகளின் கடற்படைகளுக்கு இடையே பரஸ்பர தன்னம்பிக்கையை வலுப்படுத்தவும், பொதுவான புரிதலை வளர்க்கவும், கடல்சார் பாதுகாப்பை மேம்ப -டுத்துவதற்கு தேவையான சிறந்த வழிமுறைகளைப் பின்பற்றவும் இப்பயிற்சி நடத்தப்படுகிறது. இந்த வருடப் பயிற்சியை சிங்கப்பூர் கடற்படை தலைமையேற்று நடத்தியது.

**9. 'இந்தோ-தாய் CORPAT' என்பது இந்தியா மற்றும் தாய்லாந்தின் எந்த ஆயுதப்படை சம்பந்தப்பட்ட பயிற்சியாகும்?**

அ. இராணுவம் **ஆ. கடற்படை ☑**

இ. வான்படை ஈ. கடலோர காவல்படை



- ❖ இந்தியா மற்றும் தாய்லாந்தின் கடற்படைகளுக்கிடையேயான இந்திய–தாய்லாந்து ஒருங்கிணைந்த ரோந்தின் (CORPAT) முப்பதாவது பதிப்பு நவம்பர் 20 வரை நடைபெற்றது. இந்தியக் கப்பலான INS கார்முக், தாய்லாந்து கப்பலான கிரபூரி ஆகியவை இந்த ரோந்தில் பங்கேற்றுள்ளன. இந்திய அரசின் சாகர் திட்டத்தின் ஒருபகுதியாக, இந்தியப் பெருங்கடல் பகுதியில் உள்ள நாடுகளுக்கு கண்காணிப்பு, பேரிடர் நிவாரணம் மற்றும் இதர உதவிகளை இந்தியக் கடற்படை செய்து வருகிறது.

- ❖ கடற்சார்ந்த உறவுகளை மேலும் வலுப்படுத்தும் விதமாக, 2005'ஆம் ஆண்டிலிருந்து ஆண்டுக்கு இரு முறை கூட்டு ரோந்து நடவடிக்கையை இருநாடுகளும் மேற்கொண்டு வருகின்றன. வர்த்தக கப்பல் போக்குவரத்து மற்றும் சர்வதேச வர்த்தகத்துக்கு உகந்ததாக இந்தியப் பெருங்கடலின் பாதுகாப்பை உறுதிசெய்வது இதன் முக்கிய நோக்கமாகும்.

**10.மீன்வளம், கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளத்துறை அமைச்சகத்தால், 'சிறந்த கடல்சார் மாவட்டம்' விருதுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ள மாவட்டம் எது?**

அ. கிருஷ்ணா ☑

ஆ. கடலூர்

இ. தூத்துக்குடி

ஈ. கன்னியாகுமரி



- ❖ மீன்வளத்துறையில் முதன்முறையாக, இந்திய அரசு, 2019–20'ஆம் ஆண்டிற்கான சிறந்த செயல்திறன் உடைய மாநிலங்களுக்கு விருது வழங்கி கௌரவித்தது. அதில், கடற்புற மாநிலங்களில் ஒடிசாவும்; உள்நாட்டு மாநிலங்களில் உத்தரபிரதேசமும்; மலைப்பாங்கான மற்றும் வடகிழக்கு மாநிலங்களில் அஸ்ஸாமும் தெரிவாகின.

- ❖ 2019–20'ஆம் ஆண்டிற்கான சிறந்த அமைப்புகளுக்கும் இந்திய அரசு விருது வழங்கி கௌரவித்தது. அதில், 'கடல்சார்' பிரிவில் தமிழ்நாடு மீன்வள மேம்பாட்டுக் கழகமும்; 'உள்நாட்டு' பிரிவில் தெலுங்கானா மாநில மீனவர் கூட்டுறவு சங்கங்கள் கூட்டமைப்பும்; 'மலைப்பாங்கான' பிரிவில் அஸ்ஸாம் கூட்டுறவு மீன் சந்தைப்படுத்தல் மற்றும் செயலாக்க கூட்டமைப்பும் தெரிவாகின.

- ❖ சிறந்த கடல்சார் மாவட்டமாக ஆந்திர பிரதேச மாநிலத்தின் கிருஷ்ணா மாவட்டமும்; ஒடிசா மாநிலத்தின் கலஹந்தி சிறந்த உள்நாட்டு மாவட்டமாகவும்; அஸ்ஸாம் மாநிலத்தின் நாகான் சிறந்த மலைப்பாங்கான மற்றும் வடகிழக்கு மாவட்டமாகவும் தெரிவாகின.

# நடப்பு நிகழ்வுகள்

**1. 2018ஆம் ஆண்டு மாதிரி பதிவு முறையின்படி, இந்தியாவில் நிலவும் பச்சிளங்குழந்தைகளின் இறப்பு விகிதம் என்ன?**

அ. 1,000 பிறப்புகளுக்கு 15 இறப்பு

ஆ. 1,000 பிறப்புகளுக்கு 18 இறப்பு

இ. 1,000 பிறப்புகளுக்கு 20 இறப்பு

ஈ. 1,000 பிறப்புகளுக்கு 23 இறப்பு ☑



❖ தேசிய பச்சிளங்குழந்தைகள் வாரமானது மத்திய குடும்பநலம் & சுகாதார அமைச்சகத்தால் நவ.15–21 வரை அனுசரிக்கப்பட்டது. பச்சிளம் குழந்தைகளின் உடல்நலத்திற்கு வழங்கப்படும் முக்கியத்துவத்தை வலியுறுத்தவும், நலவாழவுத்துறையின் முக்கிய முன்னுரிமைகளில் இதுவும் ஒன்று என்பதை எடுத்து உரைக்கவும் இந்த வாரம் அனுசரிக்கப்படுகிறது. "எந்த இடத்திலும், எந்த ஒரு நலவாழ்வு மையத்திலும் அனைத்து பச்சிளங்குழந்தைகளுக்கும் தரமான, சமமான மற்றும் கண்ணியமான சேவை" என்பதே இந்த ஆண்டு (2020) தேசிய பச்சிளங்குழந்தைகள் வாரத்தின் கருப்பொருளாகும்.

**2. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, சொட்டுநீர்ப் பாசன நிதியத்தை உருவாக்கிய அமைப்பு எது?**

அ. NABARD ☑

ஆ. இந்திய ரிசர்வ் வங்கி

இ. SEBI

ஈ. FCI

❖ NABARD வங்கியுடன் இணைந்து ₹5,000 கோடி மூலதன நிதியில் சொட்டுநீர்ப்பாசன நிதியம் 2019–20ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டு செயல்பாட்டில் உள்ளது. இந்த நிதியத்தின் நோக்கம், சொட்டுநீர்ப் பாசன திட்டங்களை விரிவுபடுத்துவதற்கு, மாநிலங்களுக்கு வட்டி மானிய கடன்களை வழங்குவதும், பிரதமரின் கிரிஷி சின்சாயி திட்டத்தின் கீழான சொட்டுநீர்ப்பாசன திட்டங்களை ஊக்குவிப்பதுமாகும். சொட்டு நீர்ப்பாசன நிதியின் வழிகாட்டுதல் குழு ₹3971.31 மதிப்பிலான கடன் திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்துள்ளது. இதில் தமிழ்நாட்டுக்கு ₹1357.93 கோடி வழங்கப்பட்டுள்ளது.

**3.இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தில் வழிசெலுத்தலுக்குப் பயன்படுத்துவதற்காக, Indian Regional Navigation Satellite System (IRNSS)'க்கு ஒப்புதல் அளித்துள்ள அமைப்பு எது?**

அ. பன்னாட்டு கடல்சார் அமைப்பு ☑

ஆ. ஐக்கிய நாடுகள் அவை

இ. பன்னாட்டு தொலைத்தொடர்பு ஒன்றியம்

ஈ. உலக சுற்றுலா அமைப்பு

❖ இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தில் செயல்படுவதற்காக, உலகளாவிய வானொலி வழிசெலுத்தல் அமைப்பின் (WWRNS) ஒருபகுதியாக இந்திய பிராந்திய வழிசெலுத்தல் செயற்கைக்கோள் அமைப்பை (IRNSS) பன்னாட்டு கடல்சார் அமைப்பு (IMO) அங்கீகரித்துள்ளது.

❖ இதன்மூலம், பன்னாட்டு கடல்சார் அமைப்பால் (IMO) அங்கீகரிக்கப்பட்ட உலகின் நான்காவது நாடாக இந்தியா மாறியுள்ளது. IMO'ஆல் அங்கீகரிக்கப்பட்ட வழிசெலுத்தல் அமைப்புகளைக்கொண்ட பிற மூன்று நாடுகள் அமெரிக்க ஐக்கிய நாடுகள், இரஷ்யா மற்றும் சீனா ஆகும்.

**4.நடப்பாண்டு (2020) நடைபெற்ற பதினைந்தாவது G20 உச்சிமாநாட்டின் கருப்பொருள் என்ன?**



அ. Realising the Opportunities of the 21st Century for All ☑

ஆ. Extraordinary times; Extraordinary Steps

இ. Pandemic preparedness

ஈ. Sustainable Growth and Climate Resilience

❖ சௌதி அரேபியா கூட்டிய பதினைந்தாவது G20 உச்சிமாநாட்டில் பிரதமர் நரேந்திர மோடி பங்கேற்றார். 19 உறுப்புநாடுகளின் தலைவர்கள், ஐரோப்பிய யூனியன் மற்றும் அழைப்பு விடுக்கப்பட்ட இதர நாடுகள் மற்றும் பன்னாட்டு அமைப்புகள் கலந்துகொண்ட இந்த உச்சிமாநாடு, COVID-19 தொற்று காரணமாக காணொலிக்காட்சிமூலம் நடத்தப்பட்டது. இவ்வுச்சிமாநாடு, "அனைவருக்குமான 21ஆம் நூற்றாண்டின் வாய்ப்புகளை உணர்ந்து கொள்வது" என்ற கருப்பொருளை மையமாகக் கொண்டு நடந்தது.

**5.நில அதிர்வு ஆய்வைத் தொடங்கியுள்ள இந்திய நிறுவனம் எது?**

அ. இந்திய எண்ணெய் நிறுவனம் ☑

ஆ. ONGC

இ. BHEL

ஈ. GAIL

❖ இந்திய எண்ணெய் நிறுவனத்தின் (OIL) ₹220 கோடி மதிப்பிலான நில அதிர்வு ஆய்வினை மத்திய பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சர் தர்மேந்திர பிரதான் தொடக்கி வைத்தார். மகாநதி படுகையிலிருந்து உற்பத்தி செய்யப்படும் எண்ணெய் மற்றும் எரிவாயு, ஒடிஸாவின் சமூக பொருளாதார வளர்ச்சியில் முக்கிய பங்காற்றும் என அவர் அப்போது கூறினார்.

**6.ஆன்லைன் சூதாட்டத்திற்கு எதிராக ஓர் அவசர சட்டத்தை இயற்றியுள்ள மாநிலம் எது?**



அ. தமிழ்நாடு ☑

ஆ. கேரளம்

இ. கர்நாடகா

ஈ. ஆந்திர பிரதேசம்

❖ தமிழ்நாட்டில் ஆன்லைன் சூதாட்டம் போன்ற இணையவழி விளையாட்டுகளை தடைசெய்யும் அவசர சட்டத்துக்கு ஆளுநர் பன்வாரிலால் புரோகித் ஒப்புதல் அளித்துள்ளார். தடையை மீறினால் ₹5,000 அபராதம் மற்றும் 6 மாதம் சிறை தண்டனை விதிக்கவும் இச்சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**7.ஹவேரி இரயில் நிலையத்திற்கு மகாதேவப்ப மைலாரா இரயில் நிலையம் என மறுபெயரிடுவதாக அறிவிப்பை வெளியிட்டுள்ள மாநில அரசு எது?**

அ. ஆந்திர பிரதேசம்

ஆ. தெலுங்கானா

இ. கேரளா

**ஈ. கர்நாடகா ☑**




❖ கர்நாடகாவின் ஹவேரி மாவட்டத்தைச் சார்ந்த விடுதலைப் போராளி மகாதேவப்ப மைலாராவின் பெயரை, ஹவேரி இரயில் நிலையத்திற்கு சூட்டுவதற்கு கர்நாடக மாநில அரசு அறிவிப்பு வெளியிட்டது. மறுபெயரிடுவதற்கான கர்நாடக மாநில அரசின் வேண்டுகோளுக்கு மத்திய உள்துறை அமைச்சகம் ஒப்புதல் அளித்துள்ளது.

**8.குடிநீர் திட்டங்களுக்காக ₹5,555.38 கோடி மதிப்புள்ள, 'ஹர் கர் நல் யோஜனா'வை பிரதமர் நரேந்திர மோடி எங்கு தொடங்கிவைத்தார்?**

அ. மத்திய பிரதேசம்

ஆ. குஜராத்

**இ. உத்தர பிரதேசம் ☑**

ஈ. ஒடிசா



❖ பிரதமர் மோடி, உத்தர பிரதேச மாநிலத்தின் விந்தியாச்சல் பகுதியில் உள்ள மிர்சாப்பூர் & சோன்பத்ரா மாவட்டங்களில் ஊரகக் குடிநீர் விநியோக திட்டங்களுக்கு காணொலி வாயிலாக அடிக்கல் நாட்டினார். இந்தத் திட்டங்களின் மூலம் 2,995 கிராமங்களில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் குழாய் தண்ணீர் இணைப்புகள் அளிக்கப்படும். இதன்மூலம் சுமார் 42 இலட்சம் பேர் பயனடைவர்.

❖ இந்தத்திட்டத்தின் செயல்பாடு மற்றும் பராமரிப்புக்காக கிராமப்புற தண்ணீர் மற்றும் சுகாதாரக் குழுக்கள் அனைத்து கிராமங்களிலும் அமைக்கப்பட்டுள்ளன. இதற்காக ₹5,555.38 கோடி செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. 24 மாதங்களுக்குள் இதற்கான பணிகளை முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**9. "FDI in India: Now, Next and Beyond" என்ற தலைப்பிலான இந்திய தொழிற்துறை கூட்டமைப்பின் (CII) அறிக்கையில், அதிகபட்ச அந்நிய நேரடி முதலீட்டை ஈர்த்த மாநிலம் எது?**

**அ. மகாராஷ்டிரா ☑**

ஆ. குஜராத்

இ. உத்தரபிரதேசம்

ஈ. ஒடிசா



- இந்திய தொழிற்துறை கூட்டமைப்பும் எர்ன்ஸ்ட் & யங் நிறுவனமும் இணைந்து, "FDI in India: Now, Next and Beyond" என்ற தலைப்பில் அறிக்கையொன்றை வெளியிட்டது. 2025ஆம் ஆண்டளவில் இந்தியா $120–160 பில்லியன் அமெரிக்க டாலர்கள் அந்நிய நேரடி முதலீட்டை ஈர்க்கக்கூடும் என இவ்வறிக்கை கூறியுள்ளது. மாநில வாரியாக மகாராஷ்டிரா மிக அதிக அளவிலான (28%) அந்நிய நேரடி முதலீட்டை ஈர்த்து முதலிடத்தில் உள்ளது. அதைத் தொடர்ந்து கர்நாடகா (19%), தில்லி (16%) மற்றும் குஜராத் (10%) ஆகியவை உள்ளன. இந்த நான்கு மாநிலங்கள் மட்டும் 2019 அக்டோபர் முதல் 2020 ஜூன் வரை 75% அந்நிய நேரடி முதலீட்டைப் ஈர்த்துள்ளன.

**10. 48ஆவது பன்னாட்டு எம்மி விருதுகள் 2020'இல் 'நாடகத்தொடர்' பிரிவின்கீழ் விருதை வென்றுள்ள இந்திய வலைத் தொலைக்காட்சித் தொடர் எது?**

அ. Breathe

ஆ. Mission Over Mars

இ. Special Ops

ஈ. Delhi Crime ☑




- அமெரிக்க ஐக்கிய நாடுகளின் நியூயார்க் நகரத்தில் நடிகர் ரிச்சர்ட் கைண்ட் நடத்திய விழாவின்போது பன்னாட்டு தொலைக்காட்சி கலை மற்றும் அறிவியல் அகாதமியானது 48ஆவது பன்னாட்டு எம்மி விருதுகளின் வெற்றியாளர்களை அறிவித்தது. ரிச்சி மேத்தா எழுதி இயக்கி, நெட்பிளிக்ஸ் இந்தியாவில் வெளியான, 'தில்லி கிரைம்' என்ற அசல் தொடர் 'நாடகத்தொடர்' பிரிவின்கீழ் விருதை வென்றது. இந்தியாவிலிருந்து தொடரொன்று எம்மி விருதை வெல்வது இதுவே முதல்முறையாகும்.

## நடப்பு நிகழ்வுகள்

### 1. CEFPPC என்ற திட்டத்துடன் தொடர்புடைய மத்திய அமைச்சகம் எது?

**அ. உணவுப்பதப்படுத்தும் தொழிற்சாலைகள் அமைச்சகம் ☑**

ஆ. உழவு மற்றும் உழவர் நல அமைச்சகம்

இ. வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம்

ஈ. இளையோர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டு அமைச்சகம்

❖ தமிழ்நாடு உள்ளிட்ட பத்து மாநிலங்களில் உணவுப் பதப்படுத்துதல் துறையில் திறனை மேம்படுத்துவத–ற்கான புதிய திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. மத்திய உணவுப் பதப்படுத்துதல் அமைச்சக–த்தின் கீழான உணவுப் பதப்படுத்துதல் பாதுகாப்பு திறன்களை உருவாக்குதல் / விரிவாக்கம் செய்தல் (CEFPPC) என்னும் திட்டத்தின்கீழ் ₹107.42 கோடி மானியத்துடன், ₹320.33 கோடி செலவில் 28 திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இதன்மூலம் சுமார் 10,000 பேருக்கு வேலை கிடைக்கும்.

### 2. நடப்பாண்டு (2020) கடைப்பிடிக்கப்பட்ட தேசிய மருந்தியல் வாரத்துக்கான கருப்பொருள் என்ன?

**அ. Pharmacists: Frontline Health Professionals ☑**

ஆ. COVID-19 Warriors

இ. Responsible Pharmacy

ஈ. Ethical Pharmacy



❖ 59ஆவது தேசிய மருந்தியல் வாரமானது நவ.16 முதல் 22 வரை நாடு முழுவதும் கொண்டாடப்பட்டது. "Pharmacists: Frontline Health Professionals" என்பது இந்த வாரத்துக்கான கருப்பொருளாகும். இந்திய மருந்துக் கழகமானது ஒவ்வோர் ஆண்டும் நவம்பர் மூன்றாம் வாரத்தில் இந்த வாரத்தை ஏற்பாடு செய்கிறது. சமுதாயத்தில் மருந்தாளுநர்களின் இருப்பை அனைவருக்கும் உணர்த்துவதும்; மருந்துகள், அவற்றின் பயன்பாடு, கையாளுதல் மற்றும் விநியோகித்தல் ஆகியவற்றில் பதிவுசெய்யப்பட்ட ஒரு மருந்தாளுநரின் பங்கை அறிந்துகொள்வதும் இந்த வாரத்தின் முக்கிய நோக்கமாகும்.

### 3.எந்த அமைச்சகத்தின்கீழ், அண்மையில், 43 செயலிகளைத் தடை செய்து (இன்றுவரை மொத்தம் 220 சீன செயலிகள்) இந்திய அரசு உத்தரவு பிறப்பித்தது?

அ. அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகம்

ஆ. வெளியுறவு அமைச்சகம்

இ. உள்துறை அமைச்சகம்

**ஈ. மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் ☑**



❖ இந்தியாவின் இறையாண்மைக்கும், பாதுகாப்புக்கும் தீங்கு விளைவிக்கும் 43 திறன்பேசி செயலிகளை தடைசெய்ய மத்திய மின்னனு மற்றும் தகவல் தொழில்நுட்ப துறை அமைச்சகம் உத்தரவு பிறப்பித்தது. மத்திய உள்துறை அமைச்சகத்தின் இணையவெளிக் குற்ற ஒருங்கிணைப்பு மையம் தகவலளித்ததை அடுத்து இந்நடவடிக்கை எடுக்கப்பட்டது.

- இதற்கு முன்பு கடந்த ஜூன் 29 அன்று 59 திறன்பேசி செயலிகளையும், கடந்த செப்.2 அன்று 118 திறன் பேசி செயலிகளையும் மத்திய அரசு தடை செய்தது குறிப்பிடத்தக்கது.

**4.பெண்களுக்கு எதிரான வன்முறைகளை ஒழிப்பதற்கான ஐநா அவையின் பன்னாட்டு நாளுக்கான கருப்பொருள் என்ன?**

அ. Orange the World: HearMeToo

ஆ. Orange the World: Generation Equality Stands Against Rape

**இ. Orange the World: Fund, Respond, Prevent, Collect! ☑**

ஈ. Orange the World: Men Against the Rape & Discrimination (MARD)




- உலகெங்கிலும் பெண்கள் பாலியல் வன்புணர்வு, குடும்ப வன்முறை மற்றும் பிற வன்முறைகளுக்கு ஆளாவது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஐநா அவை ஆண்டுதோறும் நவம்பர்.25 அன்று பெண்களுக்கு எதிரான வன்முறைகளை ஒழிப்பதற்கான பன்னாட்டு நாளை உலகம் முழுவதும் கடைப்பிடித்து வருகிறது. "Orange the World: Fund, Respond, Prevent, Collect!" என்பது நடப்பாண்டில் (2020) வரும் இந்நாளுக்கான கருப்பொருளாகும்.

**5அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, 'Chang'e–5 probe' என்பது எந்த நாட்டால் தொடங்கப்பட்ட நிலவு ஆய்வுத்திட்டமாகும்?**

அ. அமெரிக்க ஐக்கிய நாடுகள்

**ஆ. சீனா ☑**

இ. இரஷ்யா

ஈ. இஸ்ரேல்



- 'Chang'e–5' என்ற பெயரிலான நிலவு ஆராய்ச்சித் திட்டத்தை சீனா அண்மையில் அறிமுகப்படுத்தியது. கடந்த 40 ஆண்டுகளில் நிலவிலிருந்து பாறை மாதிரிகளை அதன் முன்னர் ஆராயப்படாத பகுதிகளில் இருந்து கொண்டுவரும் முதல் ஆய்வுப்பணியாக இது இருக்கும்.

- 'Chang'e–5' என்பது நிலவின் தொலைவில் தரையிறங்கிய முதல் ஆய்வுத் திட்டமாகும். நிலவின் சுழற்சி மற்றும் தற்சுழற்சிக்காலம் ஆகிய இரண்டும் ஒரே மாதிரியாக இருப்பதால், நிலவின் ஒரு பக்கம் மட்டுமே தொடர்ந்து பூமிக்கு தெரிகிறது. இன்றுவரை நிலவின் மறுபக்கம் கண்டுபிடிக்கப்படாமல் உள்ளது மற்றும் இது நிலவின் தூரப்பகுதி என்று அழைக்கப்படுகிறது.

**6.எந்த அரசாங்க செயலியின் பன்னாட்டு பதிப்பானது மத்திய தகவல் தொழில்நுட்ப அமைச்சரால் அண்மையில் வெளியிடப்பட்டது?**

**அ. UMANG ☑**

ஆ. FAME

இ. தூய்மை இந்தியா

ஈ. m-AWAS

- ❖ நவம்பர்.23 அன்று மத்திய தகவல் தொழில்நுட்ப அமைச்சர் ஸ்ரீ ரவிசங்கர் பிரசாத், UMANG செயலியின் பன்னாட்டு பதிப்பை வெளியிட்டார். UMANG என்பது புதிய தலைமுறை நிர்வாகத்திற்கான ஓர் ஒருங்கிணைந்த திறன்பேசி செயலியாகும். இது இங்கிலாந்து, அமெரிக்கா, ஆஸ்திரேலியா, கனடா நெதர்லாந்து, UAE, சிங்கப்பூர் மற்றும் நியூசிலாந்து ஆகிய நாடுகளில் வெளியிடப்பட்டுள்ளது.

- ❖ UMANG செயலி தொடங்கி மூன்று ஆண்டுகள் நிறைவடைந்ததை அடுத்து அதன் பன்னாட்டு பதிப்பு வெளியிடப்பட்டுள்ளது. வெளியுறவு அமைச்சகத்தின் ஒத்துழைப்போடு இது வெளியிடப்பட்டுள்ளது.

**7.கீழ்க்காணும் எந்தச் சீக்கிய குருவின் உயிர்த்துறவு நாள், நவம்பர் மாதத்தில், 'ஷாகீத் திவாஸ்' என அனுசரிக்கப்படுகிறது?**

**அ. குரு தேஜ்பகதூர் ☑**

ஆ. குரு ஹர்கோவிந்த்

இ. குரு கோபிந்து சிங்

ஈ. குரு ராம் தாஸ்



- ❖ குரு தேஜ்பகதூரின் உயிர்த்துறவு நாளானாது ஒவ்வோர் ஆண்டும் நவம்பர்.24 அன்று 'ஷாகித் திவாஸ்' என அனுசரிக்கப்படுகிறது. கடந்த 1675ஆம் ஆண்டில், சீக்கிய மதத்தின் 10 குருக்களுள் ஒன்பதாவது குருவான குரு தேஜ்பகதூர் தூக்கிலிடப்பட்டார். அவர் குரு ஹர்கோவிந்த்தின் இளைய மகனாவார். குரு கிரந்த் சாகிப்பின்மேல் அவர் பல்வேறு பாடல்களை இயற்றியுள்ளார்.

**8. மத்திய கல்வியமைச்சரால் தொடங்கப்பட்ட ATAL ஆசிரியர் மேம்பாட்டுத் திட்டங்களை ஏற்பாடு செய்யும் நிறுவனம் எது?**

**அ. AICTE ☑**

ஆ. UGC

இ. NASSCOM

ஈ. NCTE

- ❖ நவம்பர்.23 அன்று மத்திய கல்வி அமைச்சர் இரமேஷ் போக்ரியால் 'நிஷாங்க்', AICTE பயிற்சி மற்றும் கற்றல் அகாடமியின் (ATAL) 46 ஆசிரிய மேம்பாட்டுத் திட்டங்களை தொடங்கிவைத்தார். அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் கவுன்சிலின் உயர்கல்வி நிறுவனங்கள், ஆசிரியர்களுக்கு பயிற்சியளிக்கும். தரமான தொழில்நுட்பக் கல்வியை வழங்குவதே இந்த அகாடமியின் நோக்கமாகும். இது ஆராய்ச்சி மற்றும் தொழில்முனைவை ஊக்குவிக்கிறது.

**9.இந்திய வானூர்தி நிலையங்கள் ஆணையத்தின் தலைமையகம் அமைந்துள்ள இடம் எது?**

அ. மும்பை

**ஆ. புது தில்லி ☑**

இ. லக்னோ

ஈ. ஹைதராபாத்

- இந்திய வானூர்தி நிலைய ஆணையம் என்பது உள்நாட்டு வான்போக்குவரத்து அமைச்சகத்தின்கீழ் செயல்படும் ஒரு சட்டபூர்வ அமைப்பாகும். 1995ஆம் ஆண்டு நிறுவப்பட்ட இவ்வமைப்பு புது தில்லியை தலைமையிடமாகக்கொண்டு செயல்படுகிறது. இந்திய வானூர்தி நிலையங்கள் ஆணையமானது 2020 நவம்பர்.23 முதல் 27 வரை வானூர்தி பாதுகாப்பு விழிப்புணர்வு வாரத்தை அனுசரித்தது. அது, இந்தியா முழுவதும், AAI'ஆல் நிர்வகிக்கப்படும் அனைத்து வானூர்தி நிலையங்கள் மற்றும் வானூர்தி நிலைய வழிசெலுத்தல் சேவை ஆகிய இடங்களில் கடைப்பிடிக்கப்பட்டது.

**10.அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற முதலீட்டுக் கூட்டமான, 'RE–INVEST 2020' என்பதை ஏற்பாடு செய்த மத்திய அமைச்சகம் எது?**

அ. பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகம்

**ஆ. புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் அமைச்சகம் ☑**

இ. வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம்

ஈ. பெரு நிறுவன விவகாரங்கள் அமைச்சகம்

- புதுப்பிக்கத்தக்க எரிசக்தித்துறையில் முதலீடுகளை ஊக்குவிப்பதற்காக மத்திய புதிய & புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகமானது புதுப்பிக்கத்தக்க எரிசக்தி முதலீட்டாளர்கள் சந்திப்பு மற்றும் கண்காட்சியை (RE–INVEST 2020) ஏற்பாடு செய்துள்ளது. இந்தக் கூட்டத்தின் மூன்றாவது பதிப்பானது, 2020 நவம்பர் 26 முதல் 28 வரை, "நிலையான ஆற்றல் மாற்றத்திற்கான கண்டுபிடிப்புகள் – Innovations for Sustainable Energy Transition" என்ற கருப்பொருளின்கீழ் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. இந்த மெய்நிகர் கூட்டத்தை, பிரதமர் நரேந்திர மோடி தொடங்கிவைக்கிறார். இதன் முதல் இரண்டு பதிப்புகள், 2015 மற்றும் 2018 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்றது.

# நடப்பு நிகழ்வுகள்

**1.முதன்மை கூட்டுறவு சங்கங்களுக்கான தேசிய கூட்டுறவு மேம்பாட்டுக் கழகம் தொடங்கியுள்ள பயிற்சி தொகுதிகளின் பெயரென்ன?**

**அ. சகாகர் பிரக்யா ☑**

ஆ. NCDC சகாகர்

இ. கோஆப் எஜூகேட்

ஈ. PACS திறன் பராமரிப்பு



❖ கிராமப்புறங்களில் திறன் வளர்த்தல் பயிற்சிகளை அளிப்பதற்காக, 'சகாகர் பிரக்யா' என்னும் திட்டத்தை மத்திய உழவு, உழவர்கள் நலன், ஊரக வளர்ச்சி, பஞ்சாயத்து ராஜ் & உணவுப்பதப்படுத்துதல் அமைச்சர் நரேந்திர சிங் தோமர் தொடங்கிவைத்தார். இத்திட்டத்தின்மூலம், 45 புதிய பயிற்சிகள் நாட்டின் கிராமப் புறங்களிலுள்ள தொடக்க கூட்டுறவு சங்கங்களில் தேசிய கூட்டுறவு வளர்ச்சி கழகத்தால் அளிக்கப்படும்.

**2.திருமணத்திற்காக சட்டத்துக்குப் புறம்பாக மதமாற்றம் செய்தலை தடை செய்வதற்காக அவசர ஆணை பிறப்பித்துள்ள மாநிலம் எது?**

**அ. உத்தர பிரதேசம் ☑**

ஆ. மத்திய பிரதேசம்

இ. குஜராத்

ஈ. அஸ்ஸாம்



❖ திருமணம் செய்து கொள்வதற்காக சட்டத்துக்குப் புறம்பாக மதமாற்றம் செய்தலை தடை செய்வதற்காக அவசர ஆணை பிறப்பித்து உத்தர பிரதேச மாநில அரசு அறிவிப்பு வெளியிட்டுள்ளது. இந்த அவசர ஆணையின்படி, திருமணம் செய்து கொள்வதற்காக கட்டாயப்படுத்தியோ, வஞ்சகம்–சூழ்ச்சி செய்தோ, அல்லது மனவழுத்தத்துக்கு உள்ளாக்கியோ ஒருவர் சட்டத்துக்குப்புறம்பாக மதம்மாற்றினால், மதமாற்றம் செய்யும் அந்நபர், பிணையில் வெளிவர இயலாத குற்றஞ்செய்தவரா கருதப்படுவான்/ள். அவனு/ளுக்கு, அதிகபட்சமாக 10 ஆண்டுகள் சிறைத்தண்டனையும், ₹50,000 அபராதமும் விதிக்கப்படும்.

**3.தேசிய அறிவியல் திரைப்பட விழாவின் பத்தாவது பதிப்பு தொடங்கப்படுகிற மாநிலம் எது?**

அ. மேற்கு வங்கம்

ஆ. அஸ்ஸாம்

**இ. திரிபுரா ☑**

ஈ. உத்தரகண்ட்




❖ தேசிய அறிவியல் திரைப்பட விழாவின் பத்தாவது பதிப்பானது திரிபுரா மாநிலத்தில் தொடங்கப்பட்டது. மெய்நிகர் முறையில் இந்தத் திருவிழா நடைபெறும். அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின்கீழ் ஒரு தன்னாட்சி நிறுவனமாக செயல்பட்டு வரும் விக்யான் பிரஸார் இந்த விழாவை ஏற்பாடு செய்து

வருகிறது. இந்த ஆண்டு, திரிபுரா மாநில அறிவியல் மற்றும் தொழில்நுட்ப கவுன்சிலுடன் இணைந்து விக்யான் பிரசார் இதனை நடத்துகிறது. வெவ்வேறு மொழிசார்ந்த 372 படங்கள் பெறப்பட்டுள்ளன.

**4. CII மற்றும் எர்ன்ஸ்ட் & யங் அண்மையில் நடத்திய ஓர் ஆய்வின்படி, முதலீட்டாளர்களின் விருப்ப நாடாக உள்ளது எது?**

அ. சீனா

**ஆ. இந்தியா ☑**

இ. ஐக்கிய அமெரிக்க நாடுகள்

ஈ. மொரிசியஸ்

❖ இந்திய தொழிற்துறை கூட்டமைப்பு (CII) மற்றும் எர்ன்ஸ்ட் & யங் ஆகியவை சமீபத்தில் நடத்திய ஓர் ஆய்வின்படி, உலகெங்கிலும் உள்ள முதலீடுகளின் அடிப்படையில், பன்னாட்டு தேசிய நிறுவனங்கள் இந்தியாவை தங்கள் முதல் விருப்பமாக கருதுகின்றன.

❖ அந்தப் பன்னாட்டு நிறுவனங்களின் கொள்கை வகுப்பாளர்களுள் 82% பேர் அடுத்த 2–3 ஆண்டுகளில் தங்கள் வணிகத்தை விரிவுபடுத்தத் திட்டமிட்டுள்ளதாகக் கூறினர். இந்தியாவுக்குப்பிறகு, இரண்டாவது மிகவும் சாதகமான நாடாக வட அமெரிக்கா உள்ளது.

**5.துன்பத்திலிருக்கும் மகளிர்க்கு உதவுதற்காக பிரத்தியேக வாட்ஸ்அப் எண்ணை அறிமுகப்படுத்தியுள்ள மாநில அரசு எது?**

அ. அஸ்ஸாம்

**ஆ. கோவா ☑**

இ. கேரளா

ஈ. தெலுங்கானா

❖ கோவா மாநில முதலமைச்சர் அம்மாநிலத்தில் துன்பத்தில் உள்ள பெண்களுக்கு உதவுவதற்காக பிரத்தியேக வாட்ஸ்அப் உதவி எண்ணை (7875756177) அறிமுகப்படுத்தியுள்ளார். கோவா மாநில காவல்துறை கட்டுப்பாட்டறையுடன் இணைக்கப்பட்டுள்ள இந்த வாட்ஸ்அப் எண் 24 மணி நேரமும் செயல்படும். மத்திய பாதுகாப்பு இணை அமைச்சரும் AYUSH அமைச்சருமான ஸ்ரீ பத் நாயக் மருத்துவ ரீதியாக உதவிபுரியும் ஓர் அவசர ஊர்தியை கோவா மாநிலத்திற்கு வழங்கியுள்ளார்.

**6. அண்மையில் காலமான அஜய் லோதா, கீழ்க்காணும் எந்தத் தொழிற்துறைடன் தொடர்புடையவர்?**



அ. எழுத்தாளர்

**ஆ. மருத்துவர் ☑**

இ. அரசியல்வாதி

ஈ. அறிவியலாளர்

❖ மூத்த இந்திய–அமெரிக்க மருத்துவரான அஜய் லோதா (58) அமெரிக்காவில் கொரோனா தொற்றால் காலமானார். அவர், அமெரிக்க வம்சாவளியைச் சேர்ந்த மருத்துவர்கள் சங்கத்தின் (AAPI) முன்னாள்

தலைவராவார். 2016ஆம் ஆண்டில் 'எல்லிஸ் தீவு' பதக்கம் உட்பட பல்வேறு கௌரவங்களை அவர் பெற்றுள்ளார். புலம்பெயர்ந்த ராஜஸ்தானியர்களுக்கு அவராற்றிய பங்களிப்புக்காக அவர் அறியப்பட்டார்.

**7. சிறு தொழில்கள் மேம்பாட்டு வங்கியானது (SIDBI) MSME சுற்றுச்சூழல் அமைப்பை உருவாக்குதற்காக கீழ்க்காணும் எந்த தென் மாநிலத்துடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது?**

**அ. தமிழ்நாடு ☑**

ஆ. ஆந்திர பிரதேசம்

இ. கேரளா

ஈ. கர்நாடகா

❖ தமிழ்நாட்டில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கான (MSME) சூழல் அமைப்பை உருவாக்குவதற்காக இந்திய சிறு தொழில்கள் மேம்பாட்டு வங்கியானது (SIDBI) தமிழ்நாடு அரசுடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. இப்புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்கீழ், SIDBI ஒரு திட்ட மேலாண்மை பிரிவை தமிழ்நாடு அரசில் நிறுவும். அது, மாநிலங்களில் மேற்கொள்ளப்படவுள்ள பயிற்சி மற்றும் திறன் மேம்பாட்டுத் திட்டங்களை வடிவமைக்கும் செயல்முறையை மேற்கொள்ளும்.

**8. 2013ஆம் ஆண்டு முதல் 93 மில்லியன் மக்களை வறுமையிலிருந்து மீட்டுள்ளதாகவும், தனது நாட்டில் தீவிரமாக வறுமையை ஒழித்து வருவதாகவும் அறிவித்துள்ள நாடு எது?**

அ. இந்தியா

**ஆ. சீனா ☑**

இ. பாகிஸ்தான்

ஈ. இந்தோனேசியா



❖ கடந்த 2014ஆம் ஆண்டின் மிகவும் ஏழ்மையான பிராந்தியங்களின் பட்டியலிலிருந்த மீதமுள்ள 832 பகுதிகளையும் சீனா அண்மையில் நீக்கியது. கடந்த 2013ஆம் ஆண்டிலிருந்து 93 மில்லியன் மக்களை வறுமையிலிருந்து மீட்டுள்ளதாகவும் சீனா அறிவித்துள்ளது.

❖ சீனா தனது சொந்த தேசிய தீவிர வறுமைக்கான தரத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளது. தனிநபர் வருமான வரம்பில் ஆண்டுக்கு 4,000 யுவான் அல்லது நாளொன்றுக்கு $1.52 அமெரிக்க டாலர் மற்றும் பிற சமூக காரணிகளின் அடிப்படையில் அந்தத் தரம் உள்ளது.

**9. 'ஹர் கர் நல் யோஜனா' செயல்படுத்தப்பட்டுள்ள மாநிலம் எது?**

அ. மகாராஷ்டிரா

ஆ. குஜராத்

**இ. உத்தர பிரதேசம் ☑**

ஈ. ஒடிசா



❖ பிரதமர் நரேந்திர மோடி, உத்தர பிரதேச மாநிலத்தில், 'ஹர் கர் நல் யோஜனா'வை தொடங்கிவைத்தார். சோன்பத்ரா மற்றும் மிர்சாபூர் ஆகிய இரண்டு மாவட்டங்களில் உள்ள 4.1 மில்லியனுக்கும் அதிகமான

மக்களுக்கு குடிநீர் வழங்குவதை இத்திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது. இத்திட்டத்தின் செலவினம் ₹5,555 கோடியாகும். இந்தத்திட்டம் 3,000'க்கும் மேற்பட்ட கிராமங்களுக்கு குடிநீரை வழங்கும்.

**10. DRDO'ஆல் தொடங்கிவைக்கப்பட்டு இந்திய கடற்படைக்கு வழங்கப்பட்ட கனமான எடைகொண்ட நீர்மூழ்கி கப்பல் தகர்ப்பு ஏவுகணையின் (torpedo) பெயர் என்ன?**



அ. பிரமோஸ்

**ஆ. வருணாஸ்திரம் ☑**

இ. ஆகாஷ்

ஈ. தனுஷ்

❖ பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி அமைப்பின் (DRDO) தலைவர் அண்மையில் முதலாம் கனமான எடைகொண்ட நீர்மூழ்கி கப்பல் தகர்ப்பு ஏவுகணையான வருணாசுதிரத்தை கொடியசைத்து தொடங்கி வைத்தார். விசாகப்பட்டினம் பிரிவின் பாரத் டைனமிக்ஸ் லிமிடெட்டில் நடைபெற்ற விழாவில், இந்த நீர்மூழ்கி கப்பல் தகர்ப்பு ஏவுகணை இந்திய கடற்படையிடம் வழங்கப்பட்டது. இதை, விசாகப்பட்டினம் கடற்படை அறிவியல் & தொழில்நுட்ப ஆய்வகம் வடிவமைத்து உருவாக்கியுள்ளது.

# நடப்பு நிகழ்வுகள்

**1.மூன்றாம் பாலினத்தவர்கள் பாலின அடையாள (gender identity) சான்றிதழை விண்ணப்பிப்பதற்காக ஒரு வலைதளத்தைத் தொடங்கியுள்ள நடுவண் அமைச்சகம் எது?**

அ. பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம்

**ஆ. சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகம் ☑**

இ. உள்துறை அமைச்சகம்

ஈ. சட்டம் மற்றும் நீதி அமைச்சகம்



❖ மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சரான தாவர்சந்த் கெலாட், திருநங்கைகளுக்கான தேசிய இணையதளத்தையும், குஜராத் மாநிலத்தின் வதோதராவில், "Garima Greh: A Shelter Home for Transgender Persons" என்ற மூன்றாம் பாலினத்தவர்களுக்கான விடுதியையும் தொடங்கிவைத்தார்.

❖ இந்தப்புதிய இணையதளத்தின் வாயிலாக மூன்றாம் பாலினத்தவர்கள், சான்றுகள் மற்றும் அடையாள அட்டைகளுக்கு டிஜிட்டல் முறையில் நாட்டின் எந்த பகுதியில் இருந்தும் சுலபமாக விண்ணப்பிக்கலாம். விண்ணப்பங்கள் அனைத்தும் உரிய நேரத்தில் சரி பார்க்கப்பட்டு காலதாமதமின்றி வழங்கப்படும். அடையாள அட்டை மற்றும் சான்றிதழ்களை டிஜிட்டல் முறையிலேயே தரவிறக்கம் செய்து கொள்ளலாம்

**2.ஆஸ்கர் விருதுக்கு இந்தியாவின் சார்பில் அதிகாரப்பூர்வமாக பரிந்துரைக்கப்பட்டுள்ள திரைப்படம் எது?**

அ. தி டிஸிபிள்

ஆ. சகுந்தலா தேவி

**இ. ஜல்லிக்கட்டு ☑**

ஈ. சபாக்




❖ லிஜோ ஜோஸ் பெல்லிசேரி இயக்கிய மலையாள திரைப்படமான 'ஜல்லிக்கட்டு', 2021ஆம் ஆண்டின் 93ஆவது ஆஸ்கர் விருதுக்கு இந்தியாவின் சார்பில் அதிகாரப்பூர்வமாக பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இது, ஆஸ்கர் விருதுக்கு பட்டியலிடப்பட்ட மூன்றாவது மலையாள திரைப்படமாகும்.

❖ இந்தத் திரைப்படம், எழுத்தாளர் S ஹரீஷின் 'மாவோயிஸ்ட்' என்ற கதையை தழுவி எடுக்கப்பட்டதாகும். தற்போது வரை, லகான், மதர் இந்தியா மற்றும் சலாம் பம்பாய்! ஆகிய மூன்று இந்திய படங்கள் மட்டுமே ஆஸ்கர் விருதை வென்றுள்ளன.

**3.தொலைத்தொடர்புத்துறையின் சமீபத்திய அறிவிப்பின்படி, 2021 ஜனவரி முதல் தரைவழி தொலைபேசி இணைப்பிலிருந்து அலைபேசிக்கு அழைப்புகள் மேற்கொள்ளும்போது, கீழ்க்காணும் எந்த எண்ணை அலைபேசி எண்ணின் முன்னொட்டாக கொடுக்கவேண்டும்?**

அ. 9 ஆ. 2

இ. 3 **ஈ. 0 ☑**

0

❖ போதுமான எண் வளங்களை தொலைபேசி மற்றும் அலைபேசி சேவைகளுக்கு வழங்கும் விதமாக, தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணையத்தின் பரிந்துரையை ஏற்றுக்கொண்டு தொலைத்தொடர்பு துறை புதிய முடிவொன்றை எடுத்துள்ளது.

❖ இதன்படி, 2021 ஜன.15'லிருந்து தொலைபேசியிலிருந்து அலைபேசிக்கு செய்யப்படும் அழைப்புகளின் போது '0' அழுத்த வேண்டும். தொடர்புகொள்ளவேண்டிய அலைபேசி எண்ணை அழுத்துவதற்கு முன்னர் தொலைபேசியில் சுழியத்தை அழுத்தி, அதன்பின்னர் அழைக்க வேண்டும்.

**4.அதன் நூற்றாண்டில் ₹100 நினைவு நாணயம் பெற்ற இந்தியாவின் மூன்றாவது பல்கலைக்கழகம் எது?**

அ. மெட்ராஸ் பல்கலைக்கழகம்

**ஆ. லக்னோ பல்கலைக்கழகம் ☑**

இ. கொல்கத்தா பல்கலைக்கழகம்

ஈ. ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகம்

❖ உத்தர பிரதேச மாநிலத்தில் உள்ள ஓர் அரச பல்கலைக்கழகமான லக்னோ பல்கலைக்கழகம் அதன் நூற்றாண்டில் ₹100 நினைவு நாணயம் பெற்ற இந்தியாவின் மூன்றாவது பல்கலைக்கழகமாக ஆனது. இதற்கு முன்பு மைசூர் பல்கலைக்கழகம் மற்றும் பனாரஸ் ஹிந்து பல்கலைக்கழகம் ஆகிய இரண்டு பல்கலைக்கழகங்கள் மட்டுமே இந்தக் கௌரவத்தை பெற்றிருந்தன. பிரதமர், அப்பல்கலைக்கழகத்தின் நூற்றாண்டு நாள் கொண்டாட்டத்தில் கலந்துகொண்டு சிறப்பு அஞ்சல் தலை மற்றும் ₹100 மதிப்புடைய நினைவு நாணயத்தை வெளியிட்டார்

**5.புதிதாக நிறுவப்பட்ட UMANG விருதுகளில், கீழ்க்காணும் எந்த அமைப்புக்கு பிளாட்டினம் கூட்டாண்மை விருது வழங்கப்பட்டது?**

அ. ESIC

**ஆ. EPFO ☑**

இ. LIC

ஈ. GIC

❖ UMANG செயலி தொடங்கி மூன்று ஆண்டு நிறைவடைந்துள்ளது. இந்நிகழ்ச்சியில், மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் இரவிசங்கர் பிரசாத் புதிதாக நிறுவப்பட்ட UMANG விருதுகளை அறிமுகப்படுத்தினார். கடந்த ஆறு மாதங்களில், சராசரி பரிவர்த்தனைகளின் அடிப்படையில் நடுவண் மற்றும் மாநிலத் துறைகளுக்கு விருதுகள் வழங்கப்படும். UMANG செயலியில் 25 இலட்சத்துக்கும் மேற்பட்ட பரிவர்த்தனைகளை பதிவுசெய்ததற்காக ஊழியர்களின் வருங்கால வைப்பு நிதி அமைப்புக்கு (EPFO) 'பிளாட்டினம் கூட்டாண்மை விருது' வழங்கப்பட்டுள்ளது.

### 6.கங்கா அதிவிரைவு நெடுஞ்சாலை திட்டத்திற்கு ஒப்புதல் அளித்துள்ள மாநில அரசு எது?



அ. உத்தரகண்ட்

**ஆ. உத்தர பிரதேசம் ☑**

இ. பீகார்

ஈ. ஜார்க்கண்ட்

❖ ₹36,402 கோடி மதிப்புள்ள 594 கிமீ நீள கங்கா அதிவேக நெடுஞ்சாலை திட்டத்திற்கு உத்தர பிரதேச மாநில அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இந்தத்திட்டத்தில், ஹரித்வாரிலிருந்து அலகாபாத் வரை கங்கை ஆற்றின் குறுக்கே இந்த அதிவிரைவு நெடுஞ்சாலை இயங்கும். இந்த அதிவிரைவு நெடுஞ்சாலையை மாவட்ட வாரியாக சீரமைக்க மாநில அமைச்சரவை ஒப்புதல் அளித்தது. உத்தர பிரதேச மாநில அதி விரைவு நெடுஞ்சாலை தொழிற்துறை மேம்பாட்டு ஆணையம் இந்தத் திட்டத்தை செயல்படுத்தும்.

### 7. 'கட்டுடல் இந்தியா பள்ளி வாரம்' ஆனது, எந்த மாதத்தில்வரும் வாரத்தில் கொண்டாடப்படுகிறது?

அ. செப்டம்பர்

ஆ. அக்டோபர்

இ. நவம்பர்

**ஈ. டிசம்பர் ☑**

❖ பள்ளி குழந்தைகளுக்கு உடற்பயிற்சி மற்றும் விளையாட்டு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துதற்காக, 'கட்டுடல் இந்தியா பள்ளி வாரம்' திட்டமானது கடந்த ஆண்டு நவம்பரில் தொடங்கப்பட்டது. பள்ளிகள், தங்களை, 'கட்டுடல் இந்தியா' இணையதளத்தில் பதிவுசெய்த பிறகு, டிசம்பர் மாதத்தில் ஒரு வாரத்தைத் தேர்ந்தெடுக்கும். பின், விளையாட்டு அமைச்சகத்தால் பட்டியலிடப்பட்ட செயற்பாடுகளை குழந்தைகள் பின்பற்றும். கடந்த ஆண்டு, இந்த நிகழ்ச்சியில், 15000'க்கும் மேற்பட்ட பள்ளிகள் பங்கேற்றன.

### 8.வேளாண் அமைச்சரால் திறக்கப்பட்ட NAFED'இன் புதிய வகை உழவர் உற்பத்தி அமைப்பு எது?



அ. மூங்கில் FPO

**ஆ. தேன் FPO ☑**

இ. பட்டு FPO

ஈ. இரப்பர் FPO

❖ தேசிய வேளாண் கூட்டுறவு சந்தைப்படுத்துதல் கூட்டமைப்பின் தேன் உழவர் உற்பத்தியாளர்கள் அமைப்பை மத்திய உழவு & உழவர்கள் நலன் அமைச்சர் நரேந்திர சிங் தோமர் தொடங்கிவைத்தார். இந்த அமைப்பு, சிறு உழவர்களின் வருவாயை உயர்த்தும் லட்சியத்தை அடைய உதவும். '10,000 விவசாயி உற்பத்தியாளர் அமைப்புகளின் உருவாக்கம் மற்றும் ஊக்குவிப்பு' என்னும் திட்டத்தின்கீழ், தேன் விவசாயி உற்பத்தியாளர்கள் அமைப்புகள் தொடங்கப்பட்டுள்ளன.

**9. "சூரிய ஒளிமின்னழுத்த மின்னுற்பத்தி நிலையம் 1.5 MW" என்று பெயரிடப்பட்ட மிகப்பெரிய சூரிய மின்னுற்பத்தி திட்டம் நிறுவப்பட்டுள்ள இடம் எது?**



அ. ஜம்மு & காஷ்மீர்

**ஆ. லடாக் ☑**

இ. இராஜஸ்தான்

ஈ. அருணாச்சல பிரதேசம்

❖ லடாக் யூனியன் பிரதேசத்தில் உள்ள லேவில், அதிக உயரத்தில் அமைந்த மிகப்பெரிய சூரிய மின் உற்பத்தித் திட்டம் அமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் லே இந்திய வான்படை நிலையத்தில் நிறுவப்பட்டு உள்ளது. "சூரிய ஒளிமின்னழுத்த மின்னுற்பத்தி 1.5 மெகாவாட்" என்ற பெயரில் ₹122 கோடி மதிப்புள்ள இந்தத் திட்டம், இந்திய அரசின், 'இந்தியாவில் தயாரிப்போம் – Make in India' என்ற முன்னெடுப்பின்கீழ் கருத்துருவாக்கம் செய்யப்பட்டது.

**10.உத்தர பிரதேசத்தில் உள்ள அயோத்தி வானூர்தி நிலையம் ____ என மறுபெயரிடப்படவுள்ளது?**



அ. புருஷோத்தம் ஸ்ரீ இராம் வானூர்தி நிலையம்

ஆ. ஸ்ரீ இராம் வானூர்தி நிலையம்

**இ. மரியாதை புருஷோத்தம் ஸ்ரீ இராம் வானூர்தி நிலையம் ☑**

ஈ. அயோத்தி நரேஷ் ஸ்ரீ இராம் வானூர்தி நிலையம்

❖ உத்தர பிரதேச மாநில முதலமைச்சர் யோகி ஆதித்யநாத் தலைமையிலான உத்தர பிரதேச மாநில அமைச்சரவை, அயோத்தி வானூர்தி நிலையத்திற்கு மரியாதை புருஷோத்தம் ஸ்ரீ இராம் வானூர்தி நிலையம் என மறுபெயரிடுவதற்கான திட்டத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது. அதற்கான முன்மொழிவு, அம்மாநிலத்தின் சட்டமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட பின், இந்திய அரசின் உள்நாட்டு வான் போக்குவ –ரத்து அமைச்சகத்திற்கு அனுப்பப்படும்.

---